**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC No. 18/2023**

**வழக்கு சாட்சி PW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ஜெயபாலன்** | தொழில் | : சார்பு ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : பேட்டை மல்லைய கவுண்டர் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : பட்டிவீரன்பட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : நிலக்கோட்டை | வயது | : 58/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 15.06.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பட்டிவீரன்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.11.2023 ஆம் தேதி 09.00 மணி அளவில் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொருப்பில் இருந்தபோது குப்பம்மாள்பட்டியைச் சேர்ந்த ராமலிங்கம் மகன் செல்வம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.177/2023, பிரிவுகள் 294(b), 323, 506(2) இ.த.ச வின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அன்றைய தினமே காலை 10.15 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாகன் , நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** மற்றும் நான் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.3** மற்றும் **அ.சா.ஆ.4** ஆகும். மேலும் இவ்வழக்கின் தொடர்புடைய சாட்சிகளான

செல்வம், ஆறுமுகம், செந்தில்குமார், மாடசாமி, நாகன், நாகராஜ் ஆகியோர் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவர இக்குற்றச்சம்பவம் தொடர்புடைய எதிரியான தங்கவேல் மகன் முருகேசன் என்பவரை தடியன்குடிசை பேருந்து நிறுத்தத்தில் வைத்து 21.11.2023ம் தேதி மதியம் 12.10 மணியளவில் காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இத்துடன் எனது வழக்கு விசாரணையை முடித்து எதிரி தங்கவேல் மகன் முருகேசன் மீது பிரிவுகள் 294(b), 323, 506(2) இ.த.ச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவத்திற்கு முன்பு புகார்தாரரான செல்வத்தின் மகனுக்கும், எதிரிக்கும் பணம் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை நிலவி வந்தது என்றால் சரிதான் . புகார்தாரரான செல்வத்தின் மகனிடம் எதிரி முருகேசன் பிரச்சனை செய்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான் . புகார்தாரரின் மகன் காவல்நிலையத்தில் எதிரி மீது புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆறுமுகம் என்பவரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் நான் விசாரணை செய்துள்ளேன் , அவரை ப .சா.2 ஆக காண்பித்துள்ளேன். சம்பவ இடத்தில் காவல்நிலையம் சுமார் 18 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது . சம்பவ இடத்தில் இருந்து தாண்டிக்குடி காவல்நிலையத்திற்கு அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான் . சம்பவம் நடைபெற்று 4 நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . ப.சா.2 முதல் 6 வரையிலான நபர்கள் செல்வத்தின் உறவினர்கள் என்றால் அதுகுறித்த விபரம் எனது விசாரணையில் தெரியவரவில்லை. சம்பவ இடம் கடைவீதி பகுதி என்றால் சரிதான், அங்கு பொதுவாக எப்போதும் 40–50 நபர்கள் இருப்பார்கள் என்றால் சரியல்ல . தனிப்பட்ட சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் வாதி செல்வத்தின்

உறவினர்களை மட்டும் விசாரணை செய்துள்ளது , விசாரணை குறைபாட்டை காட்டுகிறது என்றால் சரியல்ல . எதிரி குற்ற சம்பவத்தின் போது கத்தியைக்கொண்டு மிரட்டியதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் குற்ற சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கத்தியை கைப்பற்றியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொன்னதுபோன்று எந்த ஒரு குற்றச்சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் , எதிரி மீது கொண்ட முன்விரோதம் காரணமாக புகார்தாரர் செல்வம் கொடுத்த பொய்யான புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் தனிப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்யாமல் சம்பவ இடம் செல்லாமல் குற்றச்சம்பவத்திற்கு ஏதுவாக சாட்சிகள் வாக்குமூலம் உற்பத்திச்செய்யப்பட்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . எதிரிக்கும் , இந்த குற்ற சம்பவத்திற்கும் சம்பவதிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.15 16:20:05 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.